தலைப்பு 276 - பதுளை மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 276 பதுளை மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் தொடர்பான பொழிப்பு அறிக்கை 2023 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது

அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) பதுளை மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ACA-6 படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்த பெறுமதி ரூபா 4,861,325 ஆக இருந்த போதிலும் | மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 33,302,066 தொகையினுள் | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது படிவங்களிலுளன்ள மீதிகளை செலவு விடயங்களிலுள்ள |

| | | |
|---|---|---|
| மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 33,302,066 ஆக இருந்ததனால் ரூபா 28,440,741 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நடமுறை வேலை (WIP) களுக்குரிய பெறுமதியும் உள்ளடக்கப்பட்டதனால் அது ACA-6 படிவத்துடன் வித்தியாசப்படலாம் அதனால் அப்பெறுமதியுடன் ஒப்பீடு செய்ய முடியாது என தயவாகத் தெரிவிக்கிறேன். | மீதிகளுடன் ஒப்பீடு செய்தல் வேண்டும். |

**(ஆ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ACA-4 படிவத்தின் பிரகாரம் வைப்புக் கணக்குகள் தொடர்பான கூற்றில் 2022 சனவரி 01 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 269,172,238 ஆக இருந்த போதிலும் அது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கின் மீதியாகிய ரூபா 245,445,556 உடன் ஒப்பீடு செய்த போது ரூபா 23,726,682 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். திசெம்பர் மாதத்திற்கு மாத்திரம் உரிய மீதியானது 2022-01-01 இல் உள்ளவாறான மீதியாகவும் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளாகவும் பதியப்பட்டதன் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். இதன் போது 2022-12-31 இல் உள்ளவாறான மீதியில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை எனவும் தயவாகத் தெரிவிக்கிறேன். | மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியானது முன்னைய ஆண்டிற்கான இறுதி மீதியுடன் இணங்குதல் வேண்டும். |

**(இ) ஆதனங்கள் பெறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) ACA-6 படிவத்தில் குறிப்பிட்ட சொத்துக்கள் தலைப்பு 05 இன் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியினை 2021 ஆம் ஆண்டிற்கான ACA-6 படிவத்தின் இறுதி மீதியுடன் ஒப்பீடு செய்த போது ரூபா | இது கணனி தவறாகும். திறைசேரியினால் கணக்கின் தவறினை காரணமாகக் கொண்டு BOS அறிக்கை, பேரேட்டின்ன் மீதி, Web Upload ஆகிய மூன்றினையும் பரீட்சித்துப் | மீளாய்வாண்டிற்கான சொத்துக்களின் ஆரம்ப மீதியானது முன்னைய ஆண்டிற்கான செத்துக்களின் இறுதி மீதியுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 23,645,717 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | பார்த்து சமப்படுத்துவதற்காக சில விடயங்களை நீக்கியுள்ளது. அதனை 2022-12-31 இல் சமப்படுத்துவதற்காக திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட வித்தியாசமாகும். எங்களால் எந்த மாற்றம் செய்தலும் மேற்கொள்ளப்படவில்லை என தயவாகத் தெவிவிக்கிறேன். | |
| (ii) | ACA-6 படிவத்தில் குறிப்பிட்ட மொத்தம் ரூபா 2,557,871,579 ஆன நடைமுறையற்ற சொத்துக்கள் சம்பந்தமாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்யப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு தெரியப்படுத்தப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஓடுவதற்கு பயன்படுத்த முடியாதிருந்த 03 துவிச்சக்கர வண்டிகள், ஒரு கெப் வாகனம், கைதவிர்ப்புப் பெறுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத இன்னும் ஒரு கெப் வாகனம் என்பவற்றை மீளாய்வாண்டின் போது கைதவிர்ப்புச் செய்ததன் மூலம் ரூபா 355,000 கிடைத்திருந்தும் அச்சொத்துக்களின் மீதிக்கு உரிய செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கைதவிர்ப்பு நடவடிக்கை முடியும் வரை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்களின் மீதிக்கு உரிய செம்மையாக்கல்களைச் செய்ய முடியாது என தயவாக தெரிவிக்கிறேன். | கைதவிர்ப்புச் செய்த சொத்துக்களின் கிரயத்தை நடைமுறையற்ற சொத்தக்களின் மீதிக்கு செம்மையாக்குதல் வேண்டும். |
| (iv) | கந்தகெடிய பிரதேச செயலகத்தின் கெப் வாகனம் 2022 பெப்ரவரி 14 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி ரூபா 1,739,950 மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் இடம்பெற்றிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 06 ஆந் திகதி வரையும் நிதிப்பிரமாணம் | ஏற்றுக்கொள்கிறேன். பரீட்சிப்பு அறிக்கை 2023-03-31 ஆந் திகதி கிடைத்துள்ளதுடன் அதுவரை UPPD 7126 ஆம் இலக்க கெப் வாகனத்திற்குரிய கோவை தேசிய கணக்காய்வு உப அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததனால் | வாகன விபத்து சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு நட்டத்திற்காக பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு தேவையான மேலதிக நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே வாகனத்திற்காக கிடைக்க வேண்டிய காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தின் ஒரு பகுதியாக 2022 திசெம்பர் 27 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 555,080 ஒரு தனியார் கராஜிற்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தும் அக்காப்புறுதி இழப்பீட்டுப் பெறுவனவு மற்றும் தனியார் கராஜிற்கான கொடுப்பனவு சம்பந்தமாக 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உரிய செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதி அறிக்கை தயாரித்தல் தாமதமடைந்துள்ளதுடன் தற்பொழுது உரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. 2022-12-27 ஆந் திகதி காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் கராஜிற்கு நேரடியாக 836354 ஆம் இலக்க காசோலை வழங்கப்பட்டுள்ளதுடன் அது நிதிக்கூற்றுக்களில் குறிப்பு ii இல் ஏடுகளில் பதிவழிப்பது தொடர்பான கூற்றில் உரிய செம்மையாக்கல்கள் செய்யப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | வேண்டும். காப்புறுதி இழப்பீட்டு பெறுவனவு மற்றும் திருத்தம் செய்வதற்கான கொடுப்பனவு சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 21/2013 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தின படிகளைச் செலுத்துதலானது வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியதுடன் 03/2022 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3(XIII) ஆம் பந்தியின் பிரகாரம் மேலதிக கொடுப்பனவுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் வருடாந்த பாதீட்டின் மூலம் மேலதிக நேரவேலை செலவு விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 23,000,000 நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக நிதிப்பிமைாணம் 66 இன் கீழ் ரூபா 500,000 நிதி ஏற்பாடு | உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களுடன் இணங்குகிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். |

ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கிராமிய பாடசாலைகளில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அமைச்சின் ரூபா 6,000,000 நிதி ஏற்பாட்டின் மீது அமுல்படுத்தப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி (பொருட்கள்) ரூபா 5,636,026 பெறுமதியான பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகளில் 66 சதவீதம் அளவானவை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | விளையாட்டு மைதானத்தின் மதிப்பீடு செய்த நீளம் 45.23 மீற்றர்களாக இருந்ததுடன் அதில் 30 மீற்றர்களை நிர்மாணித்தல் முடிவடைந்துள்ளது என தயவாகத் தெரிவிக்கிறேன்.<br><br>நிர்மாணப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது சந்தையில் காணப்பட்ட விலை முரண்பாடுகளின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்திற்’கு சமமான வகையில் பொருட்களின் அளவினை விட மிகவும் குறைந்த பொருட்களையே கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. தற்பொழுது மிகுதி வேலைச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என தயவாகத் தெரிவிக்கிறேன். | உரிய காலப்பகுதிக்கு இணங்க நடவடிக்கை எடுத்து வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மஹியங்கனை பிரதேச செயலகத்திற்கு சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உல்ஹிடிய நீர்த்தேக்கத்திற்கு அருகாமையில் நன்னீர் மீன் உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக சமூர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்பாக நிதி, சுய தொழில் மற்றும் வியாபார இராஜாங்க அமைச்சினால் ரூபா 11,777,735 நிதி ஏற்பாடு | ஏற்றுக்கொள்கிறேன். நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார வீழ்ச்சி போன்ற கட்டுப்படுத்த முடியாத காரணங்களின் அடிப்படையில் செயற்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு இயலுமை இருக்கவில்லை என தயவாகத் தெரிவிக்கிறேன். | நிதி ஏற்பாட்டினை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி பொது மக்களுக்கு நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தும் உட்கட்டமைப்பு வசதிகள் மாத்திரம் தயார்படுத்தப்பட்டு ரூபா 9,755,348 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2014 ஆம் ஆண்டிற்கான மாகாணத்தை மேம்படுத்தல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹல்துமுல்ல பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட உஸ்செல்ல சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,773,300 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் கட்டிடத்தை சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை கட்டிடம் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேஙன். | கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க முறைமையை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் | மாவட்ட செயலகம் அது பற்றி தெரிந்திருக்காததுடன் எதிர்காலத்தில் அது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் அல்லது கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தேடிப் பார்த்து அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கிறேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 39(i) ஆம் உப பிரிவு | | முன்னைய ஆண்டிற்கான வருடாந்த விபரமான முகாமைத்துவ அறிக்கை 2022 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட உத்தேச பரிகாரங்கள் நடவடிக்கைகள், அல்லது கவனத்திற்கு எடுக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக 2023 யூன் 13 | - | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆந் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | **ஓய்வூதிய சுற்றறிக்கை**<br><br>2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1,757,380 | ஓய்வுபெற்றவர் மரணமடைந்த உடன் உரிய பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு தெரியப்படுத்துதல் தாமதமடைந்ததன் காரணமாக 04 பிரதேச செயலகங்களினால் மரணமடைந்த 33 ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா 1,757,380 தொகை உரிய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | மிகையாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் தகவல்களை நாளது வரையாகப் பேணுவதற்கும் மிகையாக கொடுப்பனவு செய்யாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கும் ஓய்வூதிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது மேற்கூறிய வழிகாட்டிக் கோவைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு 12 ஆம் இலக்க வழிகாட்டியில் குறிப்பிட்ட படிவத்திற்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கிறேன். கணக்காய்வினால் சமர்பிக்கப்பட்டுள்ள இலக்கங்கள் i,ii,iv, v என்பவற்றிற்குரிய விடயங்களில் உள்ளடக்குவதற்கு படிவத்தில் ஒரு நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லை எனவும் இலக்கங்கள் iii,vi என்பவற்றிற்குரிய விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் தயவாக தெரிவிக்கிறேன். | உரிய வழிகாட்டிகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Out Come) பெற்றுக்கொள்ளப்படாமை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பண்டாரவளை பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேனீக்களை வளர்க்கும் குறிக்கோளில் ரூபா 1,647,725 செலவு செய்து தேனீக்களும் | தேனீ அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளவாறு தேனீக்களை கணிப்பீடு செய்யும் போது உருவாகிய சிக்கலின் காரணமாக தேனீக்களை | முறையான காலப்பகுதிக்கு இணங்க நடவடிக்கை எடுத்து செயற்திட்டம் வெற்றியடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 33 நபர்களுக்கு மத்தியில் 24 நலன்பெறுனர்களுக்காக 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் தேனீக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நலன்பெறுனர்களுக்கு வழங்குவது தாமதமடைந்துள்ளதுடன் துரிதமாக மிகுதி நலன்பெறுனர்களுக்கு தேனீ வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேனீக்களை வளர்க்கும் நபர்களில் தற்பொழுது தேனீக்கள் இல்லாத நபர்களுக்கு வழங்குமாறும் தேன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை அமுல்ப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கந்தகெடிய பிரதேச செயலகத்தின் பொகன் ஒருவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் 50 நலன்பெறுனர்கள் தெரிவுசெய்யப்பட்டு ரூபா 7,081,240 செலவு செய்து பசுமைக்கூடு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் 2023 மார்ச் 31 ஆந் திகதியளவில் செயற்திட்டம் ஆரம்பித்து ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் 41 நலன்பெறுனர்கள் பசுமைக்கூட்டினை நிர்மாணித்திருக்காததன் காரணமாக அந்த நலன்பெறுனர்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 4,100,000 தொகையும் பல நோக்கு கட்டிடத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,950,000 தொகையும் சிகிகனமற்ற செலவாக இருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். 2023 மார்ச் 07 ஆந் திகதி வரை பொலிடனல் மனைகள் 12 அலகுகளின் வேலைகள் முழுவதும் முடிவடைந்துள்ளதுடன் 15 அலகு பொலி டனல் மனைகளை நிர்மாணிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். இன்றுவரை நிர்மாண வேலைகளை ஆரம்பிக்காத நலன் பெறுனர்களுக்குப் பதிலாக ஏனைய பொருத்தமான நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது எனவும் தயவாக தெரிவிக்கிறேன். | தொடர்ச்சியான பின் தொடர் நடவடிக்கைகளினூடாக செயற்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வெலிமட, ரிதிமாலியத்த, பண்டாரவளை ஆகிய பிரதேச செயலகங்களால் சௌபாக்கிய உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட | நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமையின் காரணமாக உருவாகிய உணவுத் தட்டுப்பாடு, மருந்து தட்டுப்பாடு முதலியவற்றின் | காணப்படும் பொருளாதார நிலைமையை கவனத்தில் கொண்டு மிகவும் வினைத்திறனான |

| | | | |
|---|---|---|---|
| | நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட 16,450 கோழிக் குஞ்சுகளில் 9,504 கோழிக் குஞ்சுகள் 2,022 திசெம்பர் 31 அளவில் மரணமடைந்ததன் காரணமாக அரசாங்கத்தினால் அதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 4,181,760 பணம் சிக்கனமற்ற செலவாக இருந்தது. | காரணமாக கோழிக் குஞ்சுகள் இறந்துள்ளதுடன் செயற்திட்டத்தை தெரிவு செய்யும் சமயத்தில் சந்தையில் அவ்வாறான நிலைமை காணப்பவில்லை எனவும் தயவாக தெரிவிக்கிறேன். | செயற்திட்டங்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பஸ்ஸர பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கித்துல் சார்ந்த உற்பத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 1,911,875 செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 161 கேஸ் லிப்களானவை கேஸ் சிலின்டர்கள் பெற்றுக்கொள்ளப்படாமையின் காரணமாக பயன்படுத்தப்படாது 2022 திசெம்பர் 31 வரை காணப்பட்டது. அதற்கிணங்க தரத்தில் கூடிய கித்தள் பாணியை உற்பததி செய்யும் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. | காணப்படுகின்ற சந்தை நிலைமையின் கீழ் Litro நிறுவனத்தினால் கேஸ் சிலின்டர்களை வழங்குவதனை நிறுத்தியதன் காரணமாக கேஸ் சிலின்டர்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது எனவும் அது எங்களால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை எனவும் தயவாக தெரிவிக்கிறேன். | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றாது கைவிடல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது அதிக ஆபத்தான வலயமான ஹப்புத்தளை தம்மேனெத்த தோட்டத்தில் வசிக்கும் 65 குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்காக தம்பேனெத்த தோட்டத்தின் ஒரு காணி தெரிவு செய்யப்பட்டு நலன் பெறுனர்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கையை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நிறைவேற்றுவதற்காக 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதியளவில் | தோட்டக் காணிகளைப் பொறுப்பேற்றல் ஒரு சிக்கலான நடவடிக்கையானதுடன் தோட்டக் காணியை பொறுபேற்பது சம்பந்தமான ஆலோசனை வேண்டப்பட்டிருந்தும் தெளிவான பதில் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் | தாமதமின்றி அதிக ஆபத்து வலயங்களில் வசிக்கும் மக்களை துரிதமாக மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| முடிவுறுத்தப்பட வேண்டிய மேற்கூறிய வீடமைப்பு செயற்திட்டத்திற்காக 2022 சனவரி 01 ஆந் திகதி வரை ரூபா 22,373,078 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் நலன்பெறுனர்களின் வீடுகள் நிர்மாணித்தலை பூரணப்படுத்தி மீள்குடியேற்றம் இடம்பெற்றிருக்காததுடன் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் செயற்திட்டம் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டது. | நிறைவேற்றப்பட்டுள்ளன. உரிய உத்தியோகத்தர்களுக்கு இது சம்பந்தமாக அதிக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மஹியங்கனை பிரதேச செயலகத்தில் புதிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 149,961,320 உடன்படிக்கை செய்யப்பட்ட பணத்திற்கு 2017 திசெம்பர் 18 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை ரூபா 139,444,590 செலவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க உடன்படிக்கைத் திகதியிலிருந்து 546 நாட்களில் வேலை முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை. அத்திகதியில் வேலை தாமதித்த காலம் 1928 நாட்களாக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட காலத்தினைப் போல் நான்கு | ஏற்றுக்கொள்கிறேன். நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கலின் காரணமாக பொருட்கள் தட்டுப்பாடு நிதிச் சிக்கல், போக்குவரத்துப் பிரச்சினை கொவிட் தொற்று நோய் நிலைமை முதலிய காரணங்களால் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிர்மாணங்களை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மடங்கிற்கு அண்மித்ததாக இருந்தது. | | |
| (ஆ) | இயற்கை அனர்த்தங்களால் அதிக ஆபத்திற்கு உள்ளாகியுள்ள குடும்பங்களை துரிதமாக அந்த இடங்களிலிருந்து அகற்றி பாதுகாப்பான இடங்களில் மீள்குடியமர்த்தி அவர்கனளின் உயிருக்கு பாதுகாப்பு வழங்குவது மாவட்ட செயலகத்தினதும் பிரதேச செயலகங்களினதும் முன்னணி செயற்பாடாகும். எனினும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை கிடைத்த ரூபா 310,693,494 நிதி ஏற்பாட்டில் ரூபா 240,552,514 செலவு செய்யப்பட்டிருந்தும் 2006 ஆம் ஆண்டிலிருந்து அதிக ஆபத்தான வலயங்களில் வசிக்கும் 4,149 குடும்பங்களில் 4,094 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதுளை மாவட்டத்திலுள்ள ஆபத்தான குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. வீடுகளை நிர்மாணிப்பது சம்பந்தமான அமைச்சரவை தீர்மானத்தினை மிகைக்க முடியாதிருத்தல், மாவட்டத்தில் காணி மட்டுப்பாடாக இருத்தல், தொகுதி வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொது நடைமுறை சமர்ப்பிக்கப்படாமை, நிதி ஏற்பாட்டின் கட்டுநிதி உரிய வேளைக்கு கிடைக்காமை என்பவற்றின் அடிப்படையில் முழு நாட்டிலும் இந்த வீடமைப்பு செயற்திட்டம் வெற்றியளித்திருக்கவில்லை. வரிசை அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் பெறுகை நடைமுறைக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி அதிக ஆபத்தான வலயங்களில் வசிக்கும் மக்களை மீளக் குடியமர்த:தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ளாதிருந்த செயற்திட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| பதுளை பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலுக்தென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் வணிக ரீதியான கீரைப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்திற்காக 154 நலன்பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 3,413,756 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 34 நலன்பெறுனர்கள் கீரைப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளாததுடன் | தோட்டத்தில் இயற்கையாகவே வளருகின்ற பயிர்களை வணிகத் தோற்றத்தில் சமர்ப்பித்தல் மாத்திரம் இடம்பெற்றது என தயவாக தெரிவிக்கிறேன். எதிர்பார்த்த கால எல்லைக்குள் உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு | செயற்திட்டத்தின் குறிக்கோளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மிகுதியானவர்களில் அரைவாசிக்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்கள் சிறிய அளவில் வீட்டுத் தேவைகளுக்காக மாத்திரம் கீரைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டதனால் வணிகப் பயிராக கீரைப் பயிர்ச் செய்கை செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**3.6 றுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை நடைமுறைகளின் மூலம் ஆகக் குறைந்த கிரயத்தினை மேற்கொள்ளும் பெறுபேறாக உச்ச அளவு பொருளாதார நலன்களை நிறுவனம் பெற்றுக்கொள்வதற்கும் அக்கறையுள்ள தரப்பினர்களுக்கு நியாயமான மற்றும் சமமான வாய்ப்பினை வழங்குவதினூடாக போட்டியின் நலன்களை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தினாலும் 02 பிரதேச செயலகங்களினாலும் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட ரூபா 2,932,751 தொகையான 07 பெறுகை நடவடிக்கைகளின் போது முன்வந்த ஒரே வழங்குனரையே தெரிவு செய்ததன் காரணமாக மேற்கூறிய பெறுகைகளின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நியாயமாக முயற்சி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். முன்னைய பயன்பாட்டு அனுபவம், சந்தையில் காணப்பட்ட நிச்சயமற்றதான பொருள் தட்டுப்பாடு, விலை உயர்வுகள், செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்தி செய்ய வேண்டியிருத்தல், மீண்டும் விலைமனுக்களை கோருவதற்கு போதியளவு காலம் இல்லாமை போன்ற காரணங்களினால் ஒரே வழங்குனர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என தயவாக தெரிவிக்கிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பஸ்ஸர பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கித்துல் சார்ந்த உற்பத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 1,867,600 செலவு செய்யப்பட்டு பொருள் விபர குறிப்பிற்கு இணக்கமற்றதாக 165 வெள்ளை இரும்பு தாச்சிகளும் பூக்கள் சீவுகின்ற 16 கத்திகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பொருள் விபரக்குறிப்பிற்கு இணங்க விலை மனுக்கள் சமர்ப்பித்திருந்தும் கொள்வனவு செய்த சமயத்தில் சந்தையில் பொருள் தட்டுப்பாடு, விலைகள் அதிகரித்தல், செயற்திட்டத்தினை துரிதமாக பூர்த்தி செய்ய வேண்டியிருத்தல் முதலியவற்றினால் நியமதரமுள்ள தாச்சிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பூக்கள் சீவுகின்ற கத்தியை கொள்வனவு செய்யும் போது Stainless steel என்ற Carbon Steel என்ற வகையாக இருத்தல் மற்றும் நீண்ட காலம் இருக்க கூடிய கைப்பிடியாக இருப்பதன் காரணமாக அக்கத்திகள் பொறுப்பேற்க்கப்பட்டது என தயவாக தெரிவிக்கிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிர்ணயிக்கப்பட்ட விபரக் குறிப்புக்களுக்கு இணங்கிய பொருட்களை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| கந்தகெடிய மற்றும் கல்தமுல்ல பிரதேச செயலகங்களினால் வெள்ளை மிளகு உற்பத்தி செயற்திட்டத்திற்காக 2022 மே 20 மற்றும் 21 ஆந் திகதிகளில் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 4,555,000 கிரயமான மிளகு உலரவைக்கும் 02 இயந்திரங்கள் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | மிளகு விளைச்சலை அறுவடை செய்யாத காலத்தின் போது இந்த இயந்திரங்களை பயன்படுத்துதல் இடம்பெறவில்லை எனவும் அக்காலத்தின் போது அந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய மாற்று உற்பத்திகள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | சிறப்பாக வளங்களை பாவனைக்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) வெலிமடை பிரதேச செயலகத்தின் 21-1100013 ஆம் இலக்க ஓய்வூதியம் பெறுபவர் 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி மரணமடைந்திருந்தும் ஓய்வூதிய தரவு முறைமையானது நாளதுவரையாக்கப்படாததன் காரணமாக மரமடைந்ததன் பின்வரும் 2019 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 1,412,812 தொகை மரணமடைந்த ஓய்வூதியகாரரின் வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் அவரின் வாரிசுவினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனவே ரூபா 850,484 பணத்தை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். 2022-03-31 ஆந் திகதியளவில் ரூபா 562,328.09 அறவிடப்பட்டுள்ளதுடன் இன்னும் அறவீடு செய்ய வேண்டியுள்ள பணம் ரூபா 850,484.19 ஆகும். | தாமதமின்றி தரவு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து மிகைக் கொடுப்பனவை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தின் கெப் வாகனம் 2017 யூலை 29 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் அதனால் ஏற்பட்ட ரூபா 6,349,333 நட்டத்தில் ரூபா 2,500,000 காப்புறுதியின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் காப்புறுதியின் மூலம் மீளளிப்புச் செய்யாத ரூபா 3,849,333 நட்டத்தினை பெறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. காப்புறுதி இழப்பீட்டுப் பணம் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன் வாகனத்தை திருத்தம் செய்வதற்கோ அல்லது பெருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது | திருத்தம் செய்யும் நடவடிக்கைக்காக கோரப்பட்ட விலை மனுக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் விசாரணை அறிக்கைகளின் சிபாரிசின் பிரகாரம் நட்டம் அறவிடப்பட்டதன் பின்னர் முழுப்பணத்தையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் விசாரணைகளை துரிதமாக முடிவுறுத்தி நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | ஊவாபரணகம பிரதேச செயலகத்தின் கெப் வாகனம் விபத்துக்குள்ளாகி 08 ஆண்டுகளின் பின்னர் அது தொடர்பான நட்டம் ரூபா 500,000 ஆக 2019 மே 15 ஆம் திகதி பதுளை மாவட்ட மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நி.பி 104(4) பரீட்சிப்பு அறிக்கைக்கு இணங்க விபத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அந்த நட்டத்தை அறவீடு செய்யுமாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையும் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக சட்ட ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது. ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு சான்றுகளை சமர்ப்பிப்பேன். | நிதிப்பிரமாணாத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 15 பிரதேச செயலகங்களின் மூலம் மகளிர் பணியக கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012-2022 ஆண்டுகளுக்கிடையேயான காலத்தில் 524 நலன்பெறுனர்களுக்கு அபேக்ஸா கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 10,633,495 கடன் பணமும், 11 பிரதேச செயலகங்களின் மூலம் சுழற்சிக் கடன் நிகழ்சித்திட்டத்தின் கீழ் 218 நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 1,984,537 கடன் பணமும் 03 பிரதேச செயலகங்களின் மூலம் மகளிர் பணியக கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012-2017 ஆண்டுகளுக்கிடையேயான காலத்தில் 22 நலன்பெறுனர்களுக்கு | நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் நிலுவையாகக் காணப்பட்ட கடன் தவணைப் பணத்தை அறவீடு செய்வதற்காக அந்த நலன்பெறுனர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கொவிட் 19 மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் அடிப்படையில் இந்த நலன் பெறுனர்களின் உழைக்கும் ஆற்றல் எதிர்பாராத வகையில் குறைவடைந்தமை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை காரணமாக இக்கடன் தவணைப் பணத்தை அறவீடு செய்தல் சிக்கலாக உள்ளது எனவும் உரிய கடன் தவணைப் பணத்தை | கடன் உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் போது கடனை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விதவைகள் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 180,700 தொகையான கடன்பணமும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தயவாக தெரிவிக்கிறேன்.. | |
| (ஆ) | தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண சபைக்கு உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதாக யிருந்தால் அந்த மாகாண சபையிடமிருந்து உரிய கடன் பணத்தை ஒரே தடவையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு அறவீடு செய்ய முடியாது போனால் மாதாந்த தவணைப் பணமாகவேனும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் பதுளை மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் சேவையாற்றி மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 05 ஆண்டுகளுக்கு மிகைத்த காலமாகக் காணப்பட்டு வரும் ரூபா 653,965 கடன் மீதி 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவுக்கு பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கடன் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| உணவுப் பாதுகாப்பினை உருவாக்குதல், ஊட்டச்சத்தினை மேம்படுத்தல், அனைவர்களும் நீரினையும் சுகாதாரத்தினையும் பெற்றுக்கொள்ளும் உரிமையை, | நுழைவு வீதிகளை நிர்மாணித்தல், கிராமிய நீர் வழங்கல், நீர்ப்பாசன நடவடிக்கைகள், சமூக உட்கட்டமைப்பு வசதிகளை | நிலைபேறான அகவிருத்திக் குறிக்கோள்களை சிறந்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு |

| | | |
|---|---|---|
| நிலைபேறான நீர் மற்றும் சுகாதாரத்தை முகாமைத்துவம் செய்து பாதுகாத்தல், சுகாதாரத்தைப் பெற்று உயிரைப் பாதுகாத்தல் மற்றும் அனைத்து வயது குழுக்களுக்கும் உடல் நலத்தை அபிவிருத்தி செய்தல், அனைத்து வகையிலும் வறுமையை அனைத்து இடங்களிலும் ஒழித்தல், சற்றாடல் பாதுகாப்பு ஆகிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களில் 85 சதவீதத்திலிருந்து 95 சதவீதமானவை மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்தல், ஏற்றுமதி விவசாய நடவடிக்கைகள் ஆகிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நாட்டில் காணப்பட்ட பொருள் தட்டுப்பாடு, பொருளாதார சிக்கல்கள், எரிபொருள் தட்டுப்பாடு முதலிய நிலைமையின் காரணமாக ஒப்பந்த நடவடிக்கைகள் தடைப்பட்டதனால் மீளாய்வாண்டின் போது 85 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரை நிறைவேற்ற முடியாதிருந்தது என தயவாக தெரிவிக்கிறேன். | உத்தியோகத்தர்கள் வினைத்திறனாக செயற்படுதல் வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை மாவட்ட செயலகத்திற்கும் 15 பிரதேச செயலகங்களுக்குமான அங்கீகரித்த பதவியணியிலுள்ள 29 பதவிகளில் 175 வெற்றிடங்கள் காணப்பட்டன.